**தலைப்பு 268 - கிளிநொச்சி மாவட்டச் செயலகம்.**

-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 268 - கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2023 மே 20 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 19 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது இவ்விடயம் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது,மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நேர்முன்னைய வருடத்தின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,333.02 மில்லியன் ஆகக் காணப்பட்ட போதிலும் மீளாய்வண்டின் நிதிக்கூற்றுக்களில் கூட்டுமொத்தம் ரூபா 1,312.22 மில்லியன் ஆகக் கொண்டு வரப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் கூட்டுமொத்தம் ரூபா 20.80 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணனி தகவல் முறைமையில் ஏற்பட்ட தவறினால் ஏற்பட்டிருந்தது. | சீராக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் NEW CIGAS ASSET Report for Final Accounts இன் பிரகாரம் அகற்றப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 7.01 மில்லியனாகக் காணப்பட்ட போதிலும் ரூபா 4.09 மில்லியன் அகற்றப்பட்டதாக நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டதனால் ரூபா 2.92 மில்லியன் மிகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. | கணனி வலைத்தள முறையில் தரவேற்றம் செய்யப்படாமை, ஆரம்ப மீதி குறைத்து காட்டப்பட்டமையால் இவ் வேறுபாடு காணப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் காட்டப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் கூட்டுமொத்தம் ரூபா 26.83 மில்லியனாக காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 24.58 மில்லியனாக வெளிப்படுத்தப்பட்டதனால் ரூபா 2.25 மில்லியன் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | கணனி வலைத்தள முறையில் தரவேற்றம் செய்யப்படாமை, ஆரம்ப மீதி குறைத்து காட்டப்பட்டமையால் இவ் வேறுபாடு காணப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் காட்டப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் என்பவற்றுடனான இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா மில்லியன் | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியசின் நிதிப் பிரமாணம் 103(1) | 0.246 | ஒரு பிரதேச செயலகத்தில் களவாடப்பட்ட 09 வகையான பொருட்களின் நட்டம் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2 முற்பணம் வழங்கலும் தீர்ப்பனவு செய்தலும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகத்திருந்து பதவியிலிருந்து விலகிய மற்றும் இளைப்பாற்றப்பட்டிருந்த 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியணியினர் கடன் நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 0.72 மில்லியன் கடந்த 01 தொடக்கம் 12 வருடங்களாக அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்புச் செய்யப்படுவதற்கும் இளைப்பாற்றுப் பணிக்கொடையிருந்து அறிவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | கடன் மீதிகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சௌபாக்கிய உற்பத்தி கிராமம் என்ற திட்டத்திற்கமைவாக 2021 ஆம் ஆண்டு கரைச்சி பிரதேச செயலகத்தினால் கூட்டுமொத்தம் ரூபா 3 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சந்தைத் தொகுதியானது குறித்த நோக்கத்துக்குப் பயன்படுத்துவதற்கு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்காது கடந்த ஒரு ஆண்டாக கைவிடப்பட்டிருந்தது. | செயற்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பொதுமக்கள் பயன்பாட்டுக்குரியதாக்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இரு வேறுபட்ட அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகளிலிருந்து மாவட்ட செயலகம் மற்றும் பூநகரி பிரதேச செயகத்தினால் கூட்டுமொத்தம் ரூபா 54.51 மில்லியன் பெறுமதியில் நிர்மாணித்து 03 கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்பு என்பவற்றுக்குக் கையளிக்கப்பட்டிருந்த தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையம், 04 வகையான உள்ளூர் உற்பத்தி கைத்தொழில்களுக்கான இயந்திர உபகரணங்கள் குறித்த நோக்கங்களுக்கு உபயோகிக்கப்பட்டிருக்காது கடந்த 03 தொடக்கம் 04 ஆண்டுகளாக கைவிடப்பட்டிருந்தன. | பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்தும் பொருட்டு இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களினால் பயன்படுத்தப்பட்டு வந்த 12 காணிகள் அதற்கு உரித்தற்றிருந்த போதிலும் அவற்றின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 232.1 மில்லியன் கடந்த 05 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக் காணிகளை மாவட்டச் செயலகத்துக்கு உரித்தானதாக்குவதற்கோ அன்றேல் பராதீனப்படுத்தப்படுவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளுக்குரிய சட்ட ரீதியான ஆவணங்களினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | உரித்தாக்குவதற்கு அல்லது பராதீனப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வன வள திணைக்களத்தினால் கரைச்சி பிரதேச செயலகத்திற்கு மரங்களை கொண்டு செல்வதற்கான அனுமதி வழங்குவதற்கான இலட்சனை பொறிப்பதற்கு பயன்படும் சுத்தியல் காணாமல் போனமை தொடர்பாக 03 வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வன வளத் திணைக்களத்திற்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டு நிதிப் பிரமாணத்திற்கமைய விசாரணை செய்து பொறுப்பினை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 4. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களில் 05 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வந்த 123 உத்தியோகத்தர்கள் 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதியிடப்பட்ட 18/2001 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைவாக 05 வருடங்கள் கழிந்தும் இடமாற்றப்பட்டிருக்காது தொடர்ந்தும் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தனர். | இடமாற்றம் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இடமாற்ற சுற்றறிக்கைக்கு அமைவாக ஆளணியினர் பரவலாக்கப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களின் 04 வகையான பதவிகளிற்கான 24 பதவியணியினர் வெற்றிடமாக மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டிருந்தனர். | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நேரடியாக நாடளாவிய அளவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களின் போது பதவி வெற்றிடம் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |